UNIV... RECEIVED 6-5-1986 PERIODICALS DIVISION

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 23 ஷஃபா 26 இதழ் 84

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 6-5-1986

# இலங்கை புதிய யோசனையில் அதிகாரப் பங்கீடு

(புதுடில்லி)

கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற இந்திய - இலங்கை உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளின் போது, அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் புதிய ஆலோசனைகளை இலங்கை தெரிவித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பலிராம் பஹத் புதுடில்லியில் கூறியுள்ளார்.

இந்த அதிகாரப் பகிர்தலா ப்படையாகக் கொண்டு அமைனது சட்டம், ஒழுங்கு, நில வுரிமை ஆகியதுறைகளை அடி யும் என்றும் திரு. பஹத் கூறினர்.

## டில்லியில் பஹத் தகவல்

இதேவேளை இணை அமைச்சர் திரு. சிதம்பரம் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை நேற்றுப் புதுடில்லியில் சந்தித்தார். இச்சந்திப்பின் போது இலங்கை இனப்பிரச்னை குறித்துத் தாம் அந்நாட்டு அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்தும் இலங்கை அரசு வைத்துள்ள புதிய யோசனைகள் குறித்தும் திரு. ராஜீவ் காந்தியுடன் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. [ரா]

## கோவிலும் சேதம்

(திருகோணமலை)

திருகோணமலையில் கடற்படையினர் சென்றவாகனத்திலிருந்து காஸ் சிலிண்டர்

5ம் பக்கம் பார்க்க)

# இலங்கை தமிழரைமீட்க உலக இயக்கங்கள் முன்வருக

## ஆந்திர முதலமைச்சர் அறைகூவல்

(மதுரை)

**"இலங்கை அரசின் வஞ்சகத் திட்டங்களைத் தட்டிக் கேட்காமல் விட்டால் இலங்கையில் தமிழினமே ஒருநாள் முற்றாக ஒழிக்கப்பட்டுவிடும். உலக அரங்கில் சிறுபான்மை மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்துவரும் இயக்கங்களெல்லாம் இலங்கைத் தமிழ் மக்களைக் காக்க உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்".**

தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு [ரெசோ] தமிழ் மக்களுக்கு ஆதரவாக மதுரையில் நேற்றுமுன் தினம் நடத்திய மாநாட்டில் உரையாற்றிய ஆந்திர முதல்வர் என் டி. ராமராவ் இவ்வாறு கூறினர்.

எதிர்பார்த்ததிற்கும் மேலாக லட்சக்கணக்கான மக்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் ராமராவ், வாஜ்பாய் ஆகியோருடன் திரு உன்னி கருஷ்ணன் [காங்கிரஸ்-எஸ்], பகுகுணா, திரு பலவத் சிங் [அகாலி தளம்], அப்துல் ரஜத் (காஷ்மீர் தேசிய காங்கிரஸ்], அப்துல் சமத் [முஸ்லிம் லீக்], நெடுஞ்செழியன், வீரமணி, சுப்பிரமணிய சுவாமி மற்றும் அஸாம், கர்நாடக மாநில அரசுகளின் பிரதிநிதிகள், தமிழ்ப் போராளிகளின் குழுக்களின் பிரதிநிதிகள், கூட்டணிப் பிரதிநிதிகள், திருவாளர்கள் சந்திரகாசன், ஈழவேந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### நேரடியாக இந்தியா தலையிடுக

இம் மகாநாட்டில் திரு. சந்திரகாசன் உரையாற்றுகையில், ''இலங்கையில் இடம் பெறும் இனப்படுகொலையைத் தடுக்க இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டும்'' எனக் கோரிக்கை விடுத்தார்

### போராளிகள் கருத்து

''இலங்கையில் இடம் பெற்றுவரும் இனப்படுகொலையை எம்மால் தடுத்து நிறுத்தமுடியும். ஆனால் இந்தியா எம்மை அங்கீகரிப்பதுடன் எமக்கு ஒத்துழைப்பும் வழங்கவேண்டும்'' என்று தமிழ்ப்போராளிகள் தெரிவித்தனர்.

கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில், இலங்கைத் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டுமெனக் கூறினர்.

[5-ம் பக்கம் பார்க்க]

## இரு பிரிட்டிஷ் பிரஜைகள் உறுதி: 'எக்காரணம்கொண்டும் இனிகொழும்புவரமாட்டோம்'

(கொழும்பு)

இனிமேல் கொழும்புக்கு எக்காரணம் கொண்டும் விஜயம் செய்வதில்லை எனத்திர்மானித்துள்ளோம்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்றஎயர் லங்கா குண்டுவெடிப்பின் போதுஉயிர்தப்பிய வெரோனிகாபிரெஞ்ச், ஜேம்ஸ் என்ற இரு பிரிட்டிஷ் பிரஜைகள் உறுதிபூண்டுள்ளனராம்.

இவர்களிருவரும் இப்போது எரிகாயங்களுக்காகச் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ய-செ)

## 16 வீடுகளில் சட்டவிரோத மின்இணைப்பு அகற்றப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் நேற்று 16 வீடுகளில் சட்டவிரோத மின் இணைப்புக்கள் அகற்றப்பட்டன

யாழ். மாநகர சபை மின் சாரப் பகுதி ஊழியர்கள் கடற்கரைப்பகுதியைச்சேர்ந்த

[5ம் பக்கம் பார்க்க]

## நேற்றுக் காலை நகரில் ஏற்பட்ட பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முகாமிலிருந்து நேற்றுக் காலை வெளி வந்த இராணுவத்தினர் யாழ் சுப்பிரமணியம் பூங்காப் பகுதியில் நின்று துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர்.

இச்சம்பவத்தினால் யாழ் நகரில் பதற்ற நிலைஏற்பட்டது.

யாழ். மத்தியகல்லூரிக்கு வந்திருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பெரிதும் கலக்கமடைந்தனர்.

யாழ் நீதிமன்றம் வந்த சட்டத்தரணிகளும், கட்சிக்காரர்களும், நண்பலுக்கு முன்னரே சென்றுவிட்டனர்

வீதியில் சன நடமாட்டம் காணப்படவில்லை. ஓயவூதியம் பெறவந்தவர்களும் உடன்திரும்பிச் சென்றுவிட்டனர்.

## வானத்திலிருந்து சூடு

[யாழ்ப்பாணம்]

ஹெலிகொப்டரிலிருந்து நேற்று நண்பகல் சரமாரியாகத் துப்பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பலாலி விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளின் மேலாகப் பலதடவைகள் வட்டமிட்ட ஹெலிகொப்டர் அளவெட்டிப் பகுதியை நோக்கிச் சென்று துப்பாககி வேட்டுக்களைத் தீர்த்தது. ஆயினும் சேதமெதுவும் ஏற்படவில்லை, (மா]

## ஆலங்கேணியில் இரு இளைஞர்கைது

(திருகோணமலை)

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆலங்கேணிப் பகுதியில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களை ஊர்காவல் படையினர் நேற்றுக கைதுசெய்தனர்

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் பின்னர் 'சயினட்' அருந்தி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்விருவரும் பின்னர் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## விபததில் சிக்கிய தேன்னிலவு தம்பதிகள்

[கொழும்பு]

கடந்த சனிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விபத்துக்குள்ளான எயர்லங்கா விமானத்தில் ஜப்பானைச் சேர்ந்த நான்கு இளம் தம்பதிகள் தமது தேனிலவைக் சழிக்க மாலை தீவு செல்லவிருந்தனராம். இவர்களில் ஒரு தம்பதியினர் பலியாகினர் இவர்களின் சடலங்களை ஜப்பான் கொண்டுசெல்வதற்காக மேற்படி தம்பதியினரின் உறவினர்கள் இன்று கொழும்பு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

காயங்களுடன் தப்பிய ஏனைய மூன்று தம்பதியரில் ஒரு தம்பதியர் ஏற்கனவே ஜப்பான் சென்றுவிட்டனர் மற்ற இரு தம்பதியினரும் கொழும்பில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## மட்டக்களப்பிலும் வாகனங்கள் மீட்பு

மட்டக்களப்பு]

விடுதலை இயக்கம் ஒன்றினால் தேடுதல் நடவடிக்கையின் போது மீட்கப்பட்ட வாகனங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் உட்பட மற்றும் பெறுமதியான பொருள்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மறைவிடம் ஒன்றில் வைத்து உரிமை கோரிய பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் இப்பொருட்கள் மீட்கப்பட்டதாகத் தெரிகிறது [மா]

## விமானக்குண்டுவெடிப்பு: விரைவில் பூர்வாங்க அறிக்கை

[கொழும்பு]

கடந்த சனிககிழமையன்று கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பந்தமான விசாரணையின் பூர்வாங்க அறிக்கையொன்று விரைவில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது இவ்விபத்துப்பற்றிய உயர்மட்ட விசாரணைகள் தற்போது நடைபெற்றுவருவது தெரிந்ததே.

இவ்விமானத்தில் பயணம் செய்த, பயணம் செய்யவிருந்த பயணிகள், விமானத்தில் அனுப்பப்பட்ட பொதிகளின் உரிமையாளர்கள். இப்பொதிகள் அனுப்புவதில் சம்பந்தப்பட்ட விமானநிலைய அதிகாரிகள் ஆகியோர் இப்போது தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது

இதனிடையே விபத்துக்குள்ளான விமானத்தின் சிதைவுகளும், முன்பகுதியும் அங்கிருந்து அகற்றப்பட்டுவருகின்றன. ஆயினும் விமானத்தின் பின்பகுதி விசாரணைகள் பூர்த்தியடையும்வரை அதே இடத்தில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. சில பகுதிகள் ஆய்வுகூட பரிசோதனைக்காக பிரிட்டனுக்கு அனுப்பப்பட

(5ம பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் 500 பேர் அதிகாலை கைது

[மட்டக்களப்பு]

அக்கரைப்பற்றில் ஐந்நூறுக்கு மேற்பட்டோர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்

நேற்று அதிகாலை இக்கிராமத்தைச் சுற்றிவளைத்த இராணுவ தினர் பலதரப்பட்ட வயதினரையும் இவ்வாறு கைதுசெய்து இராணுவமுகாமுக்குக் கொண்டுசென்றுள்ளனர். [ரா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

A/L 87-88 கலை / வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 'B' ஆரம்பம் 07-05-1986. Modern Education Centre, Karaveddy [C1345]

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி 1986 இன்னுஞ் சில மாணவர்களுக்கு இடமுண்டு. ஜி. ஸி. ஈ. சித்தியடைந்த பெண்கள்விண்ணப்பிக்கலாம் குடாநாட்டுக்கு வெளியில் வசிப்போர் தபால் வழியும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். C 2142

ரேடியோ அன்ட் ரீ. வி. வெல்டிங், பிளம்பிங் (நீர்க்குழாய் பொருத்துதல்), மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து 10-05-86 இல் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக் குறைவு' பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 2113)

### தவறிவிட்டது

அந்தோனிப்பிள்ளை அருள் சீலி, நவாலி என்பவரது அடையாள அட்டை 29-04-86 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பஸ் நிலையக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [C2156]

### விற்பனைக்கு

புதிய, பழைய இந்தி, தமிழ் திரைப்பட இசைத்தட்டுகள் உடன் விற்பனைக்குண்டு நேரில் வரவும். த. ஸ்ரீரங்கன் சத்தியபதி, ஆயர்பாடி ஒழுங்கை, தெல்லிப்பழை. (C2112)

### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி பிரியதஷ்னி**

கேதீஸ்வரன்இந்திராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரியதஷ்னி தனது முதலாவதுபிறந்த தினத்தை6-5-86 (இன்று) நல்லூரில் இருக்கும் தனது இல்லத்தில்கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா பூட்டிமார், ஜெகதீஸ் சித்தப்பா, ஜேர்மனி விக்கினேஸ் மாமா, மோகன் மாமா, அமுதா அத்தை, சோபனு, உஷாமாமி, மற்றும் உற்ருர், உறவினர், நண்பர்கள் இவரை நல்லூர் கந்தன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென்று உள்ளம் கனிந்து வாழ்த்துகின்றனர். C 2157

---

க. உலகநாதன்,
சமாதான நீதவானும்
பற்றற்ற நீதிபதியும்
சட்டத்தரணி
அச்சுவேலி.

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

அச்சுவேலி என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் சவுதி அரேபியாவில் காலஞ்சென்றவருமான மாதர் பொன்னு ஜயராஜா என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன]
நியாயாதிக்கம்] இல. T/268

மாதர் பொன்னு ஜயராஜா கைம்பெண் இராசலட்சுமி, இராச வீதி, அச்சுவேலி.

மனுதார்

எதிராக

1. ஜயராஜா சத்தியேந்திரா. (பராயமற்றவர்)
2. ஜயராஜா ஜெயேந்திரா (பராயமற்றவர்)
3. ஜயராஜா மகள் சுமித்திரா (பராயமற்றவர்)
4. ஜயராஜா மகள்ஜெயசித்திரா. (பராயமற்றவர்)
5. பொன்னு கந்தராசா (பராயமற்ற 1-4ம் எதிர் மனுதார்களின் வழக்குப் பாதுகாவலர்) எல்லோரும் இராச வீதி, அச்சுவேலி.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தின் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 14ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனகட்டளை யாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு சித்திரை மாதம் 2ம் திகதி.

கோட்டுக்கட்டளைப்படி.

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

க. உலகநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.
[C 2159]

---

சி. கனகரத்தினம் J.P.U.M.
உதவியாளர்: க. கேசவன் J.P.U.M.
சட்டத்தரணிகளும்
நொத்தாரிசுகளும்.

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல. 84 அ— பிரிவுகள் 524, 532]

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்,

காலஞ்சென்ற சின்னத்தம்பி பரராஜசிங்கம், புங்குடுதீவு கிழக்கு புங்குடுதீவு என்பவரின் மரண சாதனத்தின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

பரராஜசிங்கம்தவராசன், இல 25, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம் இல.3945/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக/ மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1986 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 04ஆம் நாளன்று முற்பகல் மணிக்கு இந் நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

என்னுல் வரையப்பட்டது
க. கேசவன்,
மனுதாரின் சட்டத்தரணி.

1986ஆம் ஆண்டு மாசி 03 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

4-4-86

காரணம் காட்டும் திகதி 9-5-86 வரை நீடிக்கப்பட்டுள்ளது. [C 2158]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

## "பண்டத்தரிப்பு ப. நோ. கூ சங்க பொதுச் சபையைக் கலைக்குக"

### மக்கள் அவை கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருவதாலும், சங்கச் சொத்துகள் விற்கப்பட்டு வருவதாலும், இயங்கி வந்த கைத்தொழில் நிலையங்கள் மூடப்பட்டு இலட்சக் கணக்கான ரூபா நஷ்டமடைய நேருவதாலும் சங்க பொதுச்சபையே இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும், திறமையற்ற இந்த பொதுச் சபையை கலைத்து சங்க நிர்வாகத்தை புனரமைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரை தீர்மானம் ஒன்றின் மூலம் பண்டத்தரிப்பு மக்கள் அவை கேட்டுள்ளது.

பண்டத்தரிப்பு மக்கள் அவையின் பொதுக்கூட்டம் அதன் தலைவர் திரு ஏ. வி. துரையப்பா தலைமையில் நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**இ. மகேஸ்வரராஜா**

பிறப்பு: 27-11-1964
அழிப்பு: 21-04-1985

உன்பிரிவால் துயருறும்:
அக்கா சாந்தினி,
பிரேமிளா.
மட்டக்களப்பு.
C 2154

### நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்
சின்னத்தம்பி
தம்பிஐயா
(இளைப்பாறிய புகையிரத அதிபர், மலேசியா)

தோற்றம்: 15-10-1898
மறைவு: 07-04-1986

கந்தரோடையைச் சேர்ந்த தம்பிஐயா அவர்களின் பிரிவின் போதும், மரணச் சடங்குகளிலும் கலந்து கொண்டு உதவிய உற்ருர், உறவினர், நண்பர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் 07-05-86 புதன் கிழமை கந்தரோடையில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
கந்தரோடை,
சுன்னுகம்.
C 2152

---

## இந்தியாவில் பெண்களுக்கான விடுதி வசதி

சென்னை கோடம்பாக்கத்தில் நல்ல பாதுகாப்பான சூழலில் பெண்களுக்கு யாழ்ப்பாண சைவ, மாமிச உணவுவகைகள் உட்பட சகல வசதிகளுடன் தங்குவதற்கு வசதி உண்டு. மாணவிகளுக்கு சிறந்த பாடசாலைகளில் அனுமதியும் பெற்றுக்கொடுக்கப்படும். மாதாந்தக்கட்டணம் இந்தியன் ரூபாவில் ரூபா 400/- மட்டுமே.

தொடர்பு:- Mrs. K. RAJ,
Jaffna Ladies Hostel,
6A, 3rd, Street, Visvanathapuram,
Kodampakkam, Madras - 600024.
[C-2162]

---

JAFFNA COLLEGE

## WANTED

1. A resident lady teacher with experience and achievements in all branches of sports for girls such as athletics, netball, badminton and tennis. Minimum qualifications G.C E O/L.
2. Library Assistant (Resident) willing to be trained in Library Science. Should have above average proficiency in English with a keen interest in books and libraries. Minimum qualifications four passes in the G. C. E A/L examination.

Apply on forms available in the college office on or before 31st May, 1986.

Jaffna College,
Vaddukoddai.

PRINCIPAL
[A 638]

---

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்வதற்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கபபடும்.

தொடர்பு கொள்ளவும்;-

க. பாலசிங்கம்,
இரட்டையபுலம் லேன்,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.
[C-2163]

---

## பிரயாண ஒழுங்கு

### டென்மார்க்

எமது முகவர் இம்மாதம் 15-ந் திகதி
குறைந்த செலவில்
**டென்மார்க்** அழைத்துச் செல்வார்.
அத்துடன்
**சவுதி அரேபியா, மலேசியா, கிரீனேஸ்க்கு**
உடன் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
மற்றும
**பாஸ்போட், விசா, BOND, ரிக்கற்**
முதலியன உடனுக்குடன் செய்துதுகொடுக்கப்படும்.

**UNIVERSAL AGENCIES**
**யூனிவேசல் ஏஜென்சி**
(பெற்ருேலியம் கூட்டுத்தாபனம் முன்பாக)
125 (455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C 2140)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 கைத்தொழில் நாடுகளின் உச்சிமகாநாடு 'ராக்கெட்' தாக்குதல் மத்தியில் ஆரம்பம்

டோக்கியோ, மே 5

'ராக்கெட்' வீச்சுத் தாக்குதல்களின் மத்தியில் உலகின் முன்னணி கைத்தொழில் நாடுகளின் உச்சிமகாநாடு நேற்று ஆரம்பமானது. ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் ஆரம்பமான இம் மகாநாட்டில் கனடா, அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன.

ஜப்பானின் பிரபல கட்டிடமான 'ஆகசாகா' மாளிகையில் இந்த 7 கைத்தொழில் நாடுகளின் உச்சிமகாநாடு நேற்று ஆரம்பமானது.

'ஆகசாகா' மாளிகைக்குள் மேற்குறிப்பிட்ட ஏழு நாடுகளினதும் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக மகாநாட்டுக்கு வந்தனர். ஜப்பானியப் பிரதமர் திரு. நாகஸோனே இவர்களை இவர்களது நாடுகளுக்குரிய தேசியகீதங்களை இசைக்கச்செய்து வரவேற்றார்.

## உலகச் செய்திகள்

'ஆகசாகா'வுக்குள் தலைவர்கள் வந்துகொண்டிருந்த போதே அம்மாளிகை மீது 'ராக்கெட்' வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஐந்து ராக்கெட்டுகள் செலுத்தப்பட்டன. ஆயினும் அவற்றில் எவையேனும் சேதத்தை உண்டுபண்ணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ராக்கெட் தாக்குதல்களையடுத்து மகாநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

ஜப்பானில் உள்ள இடதுசாரி தீவிரவாத சக்திகளே இந்த தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதும் ஜப்பானிய மன்னர் ஹிரோஹிட்டோவின் 60வது ஆண்டு ஆட்சிப் பூர்த்தி வைபவங்களின் போதும் இ போன்ற தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம்மகாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் முதல்நாள் நிகழ்ச்சியில், சர்வதேசபயங்கரவாதம், அணுசக்தி பாதுகாப்பு என்பன குறித்து பிரஸ்தாபித்தனர்.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரும் அமெரிக்க ஜனாதிபதி ரீகனும் பயங்கரவாத நடவடிக்கைகளை வெகுவாகக் கண்டித்தனர். இவர்களின் கண்டனங்களுக்கு மகாநாட்டின் ஏனைய நாடுகள் ஏகோபித்த ஆதரவு வழங்கின.

அணுசக்தி பாதுகாப்பு பற்றிக் குறிப்பிடுகையில் எதிர்காலத்தில் சோவியத் அணுசக்தி ஆலை விபத்துப்போன்று அனர்த்தங்கள் நிகழாதவாறு போதியளவு பாதுகாப்பும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது. [கி]

# இலங்கை இனப்பிரச்னை: "இந்திய அரசின் திட்டங்கள் திருத்தப்படவேண்டும்" - கலைஞர் கருணாநிதி

மதுரை, மே 5

"இலங்கை இனப்பிரச்னை தொடர்பான இந்திய அரசின் திட்டங்கள் திருத்தியமைக்கப்படவேண்டும்" என்று திராவிடமுன்னேற்றக்கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி கேட்டுள்ளார்.

மதுரையில் நேற்று இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ்ஈழ ஆதரவாளர் அமைப்பின் அனைத்து இந்திய எதிர்க்கட்சிகளின் மகாநாடு இடம்பெற்றது. அம் மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆந்திர முதலமைச்சர் திரு என். டி. ராமராவ் தலைமையில் இந்த மகாநாடு ஆரம்பமானது. பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு வாஜ்பாய்உட்பட இந்திய அரசியல் கட்சிகள் பல இதில் கலந்துகொண்டன.



திரு. கருணாநிதி மேலும் பேசியதாவது:

"இலங்கைத் தமிழர்கள் சமத்துவத்துடனும், கண்ணியத்துடனும் பாதுகாப்பாக இலங்கையில் வாழும் வகையில் இலங்கைப் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாணப்பட வேண்டும் என்றார்.

மேலும் அவர் ஐ நா. ஸ்தாபனம், அணிசேரா இயக்கம் ஆகியவற்றிலும் இலங்கைப் பிரச்னை விரிவாக முன்வைக்கப்படவேண்டும் என்றார்.

திரு. என். டி. ராமராவ் பேசுகையில், இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக உலக மக்களின் கருத்து திரட்டப்படவேண்டும்" என்றார்.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் பிரதிநிதிகளும் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர் அ தி மு. க; இ. காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இதற்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை. (கி)

# ராஜீவ் காந்தி அனுதாபம்

புதுடில்லி, மே 5

இலங்கையின் தேசிய விமானச் சேவையான 'ஏயர் லங்கா'வின் திரைஸ்டார் விமானக்குண்டு வெடிப்புக்குறித்து இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் தமது கவலையை தொலைபேசிமூலமாக இலங்கை ஜனாதிபதியிடம் நேற்று வெளியிட்டார்.

திரு.காந்தி இந்த விமானக் குண்டு வெடிப்பைக் கண்டித்திருப்பதுடன் தாமும் தமது நாடும் இறந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் அனுதாபங்களை வெளியிடுவதா குறிப்பிட்டுள்ளார் [கி]

# 'சமாதான சபை' நிறுவுமாறு கோரிக்கை

[சித்தன்கேணி]

வட்டுக்-கிழக்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் சமாதான சபை நிறுவுமாறு வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபருக்கு பொதுமக்களும். பொது நிறுவனங்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

# தொழிலாளர் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

(வேலணை)

தீவுப்பகுதியிலுள்ள அனைத்து சங்கங்களின் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தீவுப்பகுதி தொழிலாளர் ஒன்றியம் என்ற பெயரில் புதிய அமைப்பொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளனர்.

இதில் வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்டைதீவு போன்ற கிராமசபைப் பகுதிகளிலிருந்து தொழிலாளர் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்

# இளம்பெண் ஏமாற்றினாராம் சவூதிசென்றவர்கள் பம்பாயில் அவதி

[பண்டத்தரிப்பு]

இளம்பெண் ஒருவரின் ஏற்பாட்டின்பேரில் சவுதிஅரேபியாவில் வேலைவாய்ப்புப்பெறச் சென்ற ஆறு இளைஞர்கள் ஏமாற்றப்பட்ட நிலையில் நான்கு மாதங்கள் வரையில் பம்பாய் நகரில் பரிதவித்துவிட்டு மீண்டும் தம் சொந்தஇடங்களுக்குததிரும்பி வந்துள்ளனர்.

வட்டுக்கோட்டை, அராலி ஆகிய இடங்களைச் சேர்ந்த மேற்படி இளைஞர்கள் ஆறு பேரும் நெல்லியடியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவரின் ஏற்பாட்டின்பேரில் கடந்த ஜனவரி மாதத்தில் சவுதி அரேபியாவில் வேலைவாய்ப்புப் பெறுவதற்காசப் பம்பாய் புறப்பட்டு சென்றனராம். வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக இந்த ஆறு இளைஞர்களும் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் மேற்படி பெண்ணிடம் கையளித்திருந்தனராம். பம்பாய் சென்றதும் விசா எடுக்கவேண்டும் என்று கூறி அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்டனராம். இதனை அடுத்து மேற்படி இளம்பெண் தலைமறைவாகிவிட்டாராம்.

இந்த இளைஞர்கள் நான்கு மாதங்கள் பலவேறு கஷ்டங்களை அங்கு அனுபவித்ததாகவும், இறுதியில் இளம்பெண்ணின் பிரதம ஏஜன்ட் அங்கு வந்து தமது சொந்த செலவில் அவர்களை ஊருக்குத் திருப்பி அனுப்பி வைத்ததாகவும். கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தாம் இங்கு வந்து சேர்ந்ததாகவும் சம்பந்தப்பட்ட இளைஞர்களில் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

மேற்படி இளம்பெண் தங்களிடம் அறவிட்ட 30 ஆயிரம் ரூபா பணத்தைக் தமது கொழும்பிலுள்ள பிரதம ஏஜன்டிடம் முழுமையாகக் கையளிக்கவில்லை என்றும் அதனாலேயே தங்கள் பயணம் தடைபட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

# பார்பரா கார்மால் கம்யூனிஸ்ட் தலைமையிலிருந்து ராஜினுமா

காபுல், மே 5

ஆப்கானிஸ்தான் கம்யூனிஸ்ட் கடசித் தலைவர் பதவியிலிருந்து ஆப்கான் ஜனாதிபதி திரு பர்பாா கர்மால இராஜினாமாச் செய்துள்ளார்.

திரு கர்மாலின் இந்த இராஜினமாவையடுத்து ஆப்கான் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை மேஜர் ஜெனரல மொஹமட் மஜிபுல்லா (வயது 39) பொறுப் பேற்றுள்ளார்

திரு கர்மால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையைத் துறந்துள போதிலும ஆப்கான் ஜனாதிபதியாகத் தொடர்ந்து அவர் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருமாத காலமாக சோவியத்யூனியனில் திரு கர்மால் சிகிச்சை பெற்றுவந்தார் இதனையடுத்து இவர் பொது வைபவங்களில் பகுபற்றுவதைத் தவிர்த்துக் கொண்டார்

இத் தவிர்ப்புக் காரணமாக, ஆப்கான் அரசியலிருந்து அவர் விலகியிருக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டது ஆனல் அவர் அவ்வாறு செய்யவில்லை என்பதும் சுகயீனம் காரணமாகவே கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையைத் துறந்துள்ளார் என்றும் தெரிவிககப்பட்டது. (கி)

# வர்த்தகத்தைப் பெருக்க இல. - ருமேனியா இணக்கம்

[புக்காரெஸ்ட்]

தம் மத்தியிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை மேலும் வளர்த்து வலுப்படுத்துவதற்கு இலங்கையும் ருமேனியாவும் இணங்கியுள்ளதாக இலங்கைப் பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா ருமேனியாவுக்கு மேற்கொண்ட ஐந்துநாள் விஜயத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை கூறுகிறது.

சக்திவளம், தொழிற்துறை, விமானத்துறை ஆகியவற்றில் இருநாடுகளுக்கு பயன் தரவல்ல கூட்டு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்குப் சாத்தியப்பாடுகள் பற்றி இலங்கைப் பிரதமர் ருமேனியத தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டதாகவும், இருநாடுகளுக்குமிடையில் ஏற்கனவே இருந்து வரும் இருதரப்பு ஒத்துழைப்பு பற்றி திருப்திதெரிவிக்கப்பட்டதாகவும் மேற்படி கூட்டறிக்கை மேலும்கூறுகின்றது.

"சமகால உலகினை அச்சுறுத்தும் முக்கிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் சாத்தியப்பாடு ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைப்பதிலும் பொதுவானதும் பூரணமானதுமான ஆயுதப்பரிகரணத்தை நோக்கி கூட்டாகப் பாடுபடுவதிலுமேயே தங்கியுள்ளது என்பதே இலங்கையினதும் ருமேனியாவினதும் ஒருமித்த நிலைப்பாடாகும்" எனவும் இக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ப]

# செவ்விளநீர் மரக் கன்றுகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புபகுதியிலுள்ள பொது மக்களுக்கு வீடுகளில் நாட்டுவதற் நல்ல இன செவ்விளநீர் தென்னங் கன்றுகள் நாற்று மேடையிலிருந்துசகாய விலையில் வழங்கப் பட்டு வருகின்றது இந்த செவ்விள நீர்த் தென்னம் கன்றுகளைப் பெற விரும்புவோர் தம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு பண்டத்தரிப்பு விவசாய சேவை அலுவலர் திரு வை.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

நாம் வாழும் இவ்வுலகத்தில் பலதூர இடங்களில் மக்கள் சொல்லொணு அல்லற்படுகிருர்கள். அதை யிட்டு நமக்கு வேதனை ஏற்பட்டால் தான் நாம் பண்புடைய மக்கள்.

- ஓர் அறிஞன்

# நமது நோக்கு

## மதுரை மாநாடு உணர்த்தும் விடயம்

இலங்கைத் தமிழர் பிரச்னை பல கூறுசளை உடையதாய் இருந்த போதிலும் தமிழரின் பிரதேசப் பிரச்னையே முக்கிய அம்சமாக மேலோங்கியுள்ளது. தமிழர் பிரதேசம் காப்பாற்றப் படுமானல் ஏனைய சகல அம்சங்களையும் அதற்குள் அடக்கி விடலாம் என்ற கருத்து பலம் பெற்று வருகின்றது.

இந்நிலையில் இலங்கைத் தமிழர் விடயத்தில் ஒரு சுமுகமானத்தீர்வினை உருவாக்கிக்கொடுக்கும் முயற்சியில் இந்திய அரசு கடந்த சில வருடங்களாக சூழ்நிலைகளின் நிர்ப்பந்தம் காரணமாக ஈடுபட்டுவருவது கண்கூடு. இந்த முயற்சி ஆரம்பமான [illegible]காலம் தொட்டு தமிழர் பிரச்னையில் பல்வேறு விதமான சிக்கல்களும் சர்ச்சைகளும் உருவாகி இறுதியில் தமிழ்க் கிராமங்கள் விமானக் குண்டுவீச்சுக்கும் ஹெலிகொப்டர் தாக்குதல்களுக்கும்திராவக வீச்சுக்கும்இலக்கானது ஒருபுறமிருக்க இந்தப் பிரதேசத்தினைக் காப்பாற்றித்தரவென புறப்பட்ட இளைஞர்களுக்கிடையே செயல் முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்பட்டு இன்று புதிய பரிமாணம் ஒன்று நிகழ்ந்து வருவதைக் காண்கின்ருேம்.

இதேவேளை இந்திய அரசு இலங்கையரசுடன் பேச்சு நடத்தவென வழமையான ராஜிய பிரதிநிதிகளை மட்டும் அனுப்பாமல், அமைச்சர் ஒருவரின் தலைமையிலேயே தூதுக்குழுவொன்றை அனுப்பி ஆலோசனைகள் நடத்தியுள்ளது. இந்த ஆலோசனைகளில் ஏதோ முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதுபோல் தோன்றியபோதிலும் அதன் விபரங்கள் எதுவும் இன்னமும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை.

இவை இந்திய மத்திய அரசு அதிகாரிகளினல் பரிசீலிக்கப்பட்டு இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் பிரதிநிதிகளுடன் ஆலோசிக்கப்பட்டு, அதன் பின் இலங்கையரசுடன் மேலும் விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டு ஒரு தெளிவான முடிவுக்கு வருவதற்கு காலம்செல்லும் என்பது வெளிப்படை.

இதேவேளை தமிழ் நாட்டில் மதுரை மாநகரில் ஈழ மக்கள் பாதுகாப்பு அமைப்பின் மாநாடு நடந்து முடிவடைந்துள்ளது. இம்மகாநாட்டில் முக்கிய இந்திய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட தமிழ் நாட்டில் தற்போது இருந்து வரும் இலங்கைத் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர். இம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களின் விபரம் சரியாகத் தெரியவில்லை என்றாலும், இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திய மத்தியஅரசின் அணுகுமுறையில் தீவிரமானமாற்றம் தேவையென்றும், உலக அரங்குகளில் இலங்கைத் தமிழரின் நிலைபற்றி இந்திய அரசு சரியான முறையில் எடுத்துக்கூற வேண்டும் என்றும் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக கூறப்படுகின்றது.

இந்திய மத்திய அரசு தனிப்பட்ட முறையில் அன்றி, இந்திய எதிர்க்கட்சிகளின் கருத்துக்களையும் அறிந்து இந்தவிடயத்தில் செயல்படவேண்டும் என்பதையே மதுரை மகாநடு வலியுறுத்துகின்றது. இவ்விடயம் தனிப்பட்டமுறையில் தமிழ் நாட்டின் அ. தி. மு. க. வுக்கோ, அகில இந்திய மட்டத்தில் இந்திராகாங்கிரஸ் கட்சிக்கோ மாத்திரம் அக்கறையுள்ளவொன்றல்ல. இந்திய மக்கள் அனைவரதும் அக்கறை இதில் உண்டு என்று கருதப்படுவதாஞல் இந்திய அரசு இனி மேற்கொள்ளும் முயற்சிகளில் ஏனைய கட்சிகளின் ஆலோசனைகளையும் பெறமுயல்வது அவசியம். அந்தவகையில் திரு. மு. கருணநிதியின் தலைமையிலான இலங்கைத் தமிழர் பாதுகாப்பு அமைப்பின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது அவசியம்,

## வெள்ளைப் பச்சை அரிசியால் வேலணை கடற்றெழிலாளர் பாதிப்பு!

(வேலணை)

வேலணை மேற்குஅம்பிகை நகரில் குடியேற்றப் பட்டிருக்கும் கடற்றெழிலாள மக்களுக்கு வேலணை ப. நோ, கூ. சங்கம் தொடர்ந்ம் அவர்களுக்கு வெள்ளைப் பச்சை அரிசியைத் தங்களது கிளை மூலம் விநியோகித்து வருகின்றது.

இந்த வெள்ளை பச்சை அரிசியை தினமும் சாப்பிட்டுக் கொண்டு கடற்றெழிலைச் செய்து வருவதினல் இவர்களுக்கு வயிற்றுளைச்சல், வயிற்ருேட்டம் போன்ற பலவித நோய்கள் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த பச்சை அரிசியைத் தொடர்ந்தும் வழங்காமல் எங்கள் கடற்றெழில் மக்களின் நன்மை கருதி உள்நாட்டு அரிசியை[கறுப்பு அரிசி] வழங்கியுதவுமாறு வேலணை மேற்கு கிராம சேவையாளர் பிரிவு பாதுகாப்பு விலைக் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் கௌரவ செயலாளர் திரு. இ. சி. கந்தசாமி வேலணை ப நோ கூ. சங்கத்தின் தலைவரை ம. ஜர்மூலம் கேட்டுள்ளார்கள் இதன் பிரதிகளை யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி வேலணைஉதவி அரசாங்க அதிபர்,யாழ். மாவட்ட கடற்றெழிலாளர் விரிவாக்க உத்தியோகத்தர் ஆகியோர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

## காங்கேசன்துறை மக்கள் வங்கி: அடகு வைத்தவர்களுக்கு நகை மீளளிக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை மக்கள் வங்கியில் வைத்தநகைகளை அடகு மீளப்பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களுக்கு பலாலி இராணுவமுகாமில் வைத்து அடகுநகைகள் மீளளிக்கப்பட விருப்பதாக வட பிரதேசமக்கள்வங்கிபிராந்திய முகாமையாளர் திரு. மு கணேசசுந்தரம் ஈழநாடுவுக் தெரிவித்தார்.

மேற்படி அடகு நகைகள் இம்மாதம் 9-ம், 10-ம், 11-ம் திகதிகளில் பணம் செலுத்தியவர்களுக்கு மட்டும் மீளளிக்கப் படவுள்ளது.

அடகு நகைகளை மீளப்பெறுவதற்காக காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளரிடம் கடிதம் ஒன்று பெறப் படவேண்டுமென்றும். அக்கடிதத்துடனேயே நகைகளைப் பெறுவதற்கு பலாலி முகாமிற்குச் செல்லவேண்டும் என்றும் பிரதேச முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளனர். இதுஇவ்வாற இருக்கயாழ்ஸ்ராண்லிறேட் மக்கள் வங்கியில் நகை அடகுவைத்து இதுவரை மீளப்பெருதோர் - பணம் செலுத்தியவர்கள் இன்னும் நூறுபேர்வரை இருப்பதாகவும், இவர்கள், ஸ்ராண்லிறேட் மக்கள்வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு, நகைகளைப்பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். [வா]

## மல்லாகம் ம. வி. யில் புதிய பயிற்சி நெறி

[வண்ணார்பண்ணை]

பாடசாலையைவிட்டுவெளியேறிய மாணவர்களுக்கு அறிவு கொடுக்கும் வகையில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் ஹோட்டல் முகாமைத்துவம் வானெலிபேணல், வர்த்தகம் ஆகியபயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலும் இப்பயிற்சி நெறியில் சேர விரும்பும் பாடசாலையைவிட்ட மாணவர்கள் இம்மாதம் 10ம் திகதிவரை விண்ணப்பிக்க வசதி செய்யப் பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் திரு. ஏ மகாதேவன் அறிவித்திருக்கின்ருர்

## ‘வாழ்வில் ஈடேற்றம்பெற...’

(வண்ணார்பண்ணை)

,‘மனித வாழ்க்கை அநித்தியமானது. இறைவன் ஒருவனே நித்தியமானவன் அப்பேற்பட்ட இறைவனை மறந்துவிட்டு அநித்தியமான உலக இன்பதுன்பங்களில் மனதைச் செலுத்திக் காலத்தை வீணடிக்கின்ருேம் இவற்றை உணர்ந்து வாழ்பவனுக்கே வாழ்வில் ஈடேற்றம் ஏற்படும்’’

இவ்வாறு பண்ணைகம்மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அழைப்பை ஏற்று அங்கு விஜயம்செய்த பருத்தித்துறை இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தலைவர் சுவாமி சித்தருபானந்தா உரையாற்றுகையில் நெரிவித்தார்.

திருநெல்வேலி ராமகிருஷ்ணலய அமைப்பாளர் திரு. இரா. மகேந்திரசிங்கமும் சுவாமிகளுடன் அங்கு சென்றிருந்தார்.

பண்ணைகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி செல்வி. அ. புனிதவதி தலைமையில் சுவாமிகள் அங்குவரவேற்கப்பட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ‘‘நாம் அனுபவிக்கும் சுகபோகங்களை முடிந்தளவு தியாகம்செய்ய முன்வரவேண்டும். அப்போது தான் புதிய சமத்துவமான வாழ்வு ஒன்று ஏற்படும். புண்ணிய கருமங்கள் முடிவுறும்வரை மனிதன் ஓயாது செயற்படவேண்டும். விடா முயற்சியினல்தான் மனிதன் முன்னேறமுடியும். இறையடி சேர்வதற்கும் இது முக்கியமானதாகும்’’ என்ருர்.

## மல்லாகம் பகுதி அபிவிருத்தி தொடர்பாக அரச அதிபருடன் சந்திப்பு

(வண்ணார்பண்ணை)

மல்லாகம் பகுதியின் அபிவிருத்திதொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பானபேச்சுவார்த்தை ஒன்றை மல்லாகம் கிராமஅபிவிருத்திச் சங்கத் தூதுக் குழு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்துடன் நடத்தியது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் திரு. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் அரச அதிபருடன் பேசிய இக்குழுவில் சங்கச் செயலாளர் திரு மு அருளையா, பொருளாளர் திரு. க. நடராசா, திரு. யோ பு. குணரத்தினம், திரு. க. கைலாசபிள்ளை ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

அரசாங்க அதிபர் திரு. எம்.

(5ம் பக்கம் பார்க்க)

## பகவான் சத்யசாயிபாபாவின் அன்னை ஈஸ்வராம்பா

பகவான் சத்ய சாயி பாபாவைப் பத்துமாதங்கள் தனது மணி வயிற்றில் சுமந்து உலகம் அறநெறியில் நின்று அன்புடனும் அமைதியுடனும் வாழ்ந்து இன்பநிலை எய்திட இந்தப் பாருக்கு ஈந்த அருமை அன்னையாம் ஈஸ்வராம்பாவின் நினைவுதினம் உலகெங்கும் இன்று உவகையுடன் கொண்டாடப்படுகிறது.

‘உடலெழில் குன்றி உவாந்தி
யால் நொந்து
இரண்டைந்து திங்களாய்
வெந்து
கடகடன்ருடி கால்களும் பதற
காலனின் அடிஒலி கேட்டு
திடமதை இழக்காத் தாயவள்
தியாகம்
தீஞ்சுவைக் குழந்தையாய்த்
தோன்ற
விடமதை ஒத்த வேதனை
மறப்பாள்
............................ .......’

என மகவைப்பெற்றெடுத்து உலகிற்கு வழங்க மாதா செய்யும் அரிய தியாகத்தைக் கவிஞர் பாடியுள்ளார்.

இயற்கை ஆண் பெண் வடிவங்களாகத் திகழ்வதைக் காண்கிருேம். பெண்மையே தாயாக மலர்ந்து இறைமையாகக் கனிகிறது.

மானிட வாழ்விலும் இறை உணர்விலும் பெண்மைக்கு முதன்மை வழங்கப்பட்டது. இறைவனை பார்வதி பாகன், இலட்சுமி நாராயணன் என அழைப்பது பண்டைய மரபு. பகவானையும் சாயிபாபா எனவே அழைக்கிருேம். சாயி என்ருல் தாய் என்றுதானே அர்த்தம். எனவே பெண்மைக்கே தாய்மைக்கே முதன்மைதரப்பட்டுள்ளது. உடல் நலத்திற்கு வெம்மையும் தண்மையும் இன்றியமையாதன அவைபோல இறையுணவிற்கும் ஆண்மையும் பெண்மையும் இன்றியமையாதன.

அத்தகைய பண்புநலம் வாய்க்கப்பெற்ற ஈஸ்வராம்பா அன்னையாரின் மணிவயிற்றில் தோன்றி அவதாரம் செய்துள்ளார். பகவான் சத்ய சாயி பாபா, இன்னல் இடரால் தாக்குண்டு இதயம் சோர்ந்த நிலையில் அன்னையாரை அணுகிய பாபாவின் பக்தர்களை அனுதாபத்துடனும்அன்புடனும் அரவணைத்து ஆறுதல் கூறிய சம்பவங்கள் எத்தனையோ உண்டு சில சந்தர்ப்பங்களில் பக்தர்களின் இன்னல்களுக்காக இதயம் உருகி பாபாவிடம் துணிவுடன் நேரில் சென்று அவர்களின் பரிதாபநிலையை எடுத்துரைத்து பகவானின் அருளைப்பெற்றுக்கொடுத்துள்ளார்,

தாயார் மீது பாபா எத்துணை அன்பு வைத்திருந்தார் என்பதைத் தாயாரே பல முறை எடுத்துரைத்ததுண்டு. பெற்ருேரை மகிழ்விப்பதற்காக அவர்களை பெஞரிஸ், பத்திரி போன்ற ஸ்தலங்களுக்கும் அழைத்துச் சென்றுள்ளார். குடும்பப்பொறுப்புகளை, பிரச்சினைகளை பொறுமையுடன் தாங்கிக்கொண்டு அன்புடனும்அமைதியுடனும் அறநெறியில் வாழ்ந்திட பகவான் மீது அசையாத நம்பிக்கை கொண்டிருந்த அன்னையார் ஈஸ்வராம்பா தாய்க்குலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக, தியாகச்சுடராக விளங்கினர்.

அன்னையாரின் திருநாமம்
வாழ்க!
அறநெறி அன்பு தழைத்
தோங்க
பகவானின் பாதக்கமலங்களை
வணங்குவோம்

-‘கரவைகிழார்’

## அமரர் ‘‘கே. எஸ். எஸ்.’’



யாழ். இந்துக் கல்லூரியின் சரித்திரத்தில் திரு. கே. எஸ். சுப்பிரமணியம் நீங்காத இடத்தைப்பெற்றுள்ளார்.

தன்னுடைய தன்னலமற்ற சேவையினலும் நற்பண்புகளினலும், மாணவர் நல தில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் கல்லூரியின் ஆசி யரிடையே அவருக்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுக்கொடுத்தன. அவரது கவனிப்பின் கீழ்வரும் பாக்கியம் பெற்ற மாணவர்கள் அவரை என்றும் பாசத்துடனும், அன்புடனும் நினைவு கூர்வர்.

அவர் ஒரு நல்ல உண்மையான நண்பராக விருந்தார். அவர்மறைந்துவிட்டாலும்அவரது சேவை நிறைந்த வாழ்வு என்றும் மணம் வீசும். அவரது ஆத்மா சாந்தியடைவதாக!

வி. சிவசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

எவரி (Avery) 1000 kg மேடைத்தராசு விற்பனைக்குண்டு. இ. இராசகுமார், 234 (76), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C2170)

### வகுப்புகள்

ஆங்கிலச் சுருக்கெழுத்து தட்டெழுத்து வகுப்பு மகளிருக்குமட்டும் எதிர்வரும் 9-5-06 வெள்ளிக்கிழமையன்று மாலை 2-00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. லண்டன் பிற்மன்ஸ் பரீட்சைக்குத் தயார் செய்து தரப்படும். நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். நிர்வாகி, வின் இன் லேடீஸ் அக்கடமி, 61/1, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். (C2172)

### தவறிவிட்டது

சி. மார்க்கண்டுஜயர், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை என்பவருடைய அடையாள அட்டையும் மூக்குக் கண்ணடியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C2171)

**எம்பயர் திரையில்**
சிவகுமார்-சத்தியராஜ்
**ராமன் பரசுராமன்**

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
SUDDEN IMPACT
(Muder. Action and Thrills)
[Cinimascope and Colour]

2வது மாதம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா, கவுண்டமணி நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

**லிபேட்டி சினிமாவில்**
Mark Harmon நடித்த
TUAREC THE DESERT MARRIOR
கிராமங்களில் சென்று சித்திரைவதைசெய்யும் இராணுவத்தினரை பழிவாங்கும் தீரமிக்க இளைஞனின் கதையை சித்தரிக்கும் வர்ணப்படம்.
காட்சி நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன.
10-00, 2-00, 4-15, 6-30


## மல்லாகம் பகுதி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சலிங்கத்துடன் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். இராமநாதன், மாவட்ட உதவிச் செயலாளர் திரு. எஸ். பரமநாதன் தலைமைச் செயலக உதவி அரச அதிபர் திரு எஸ். கோபாலரத்தினம், உதவி ஆணையாளர் [திணைக்களம்] எஸ். பரமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிய பாதை அமைத்தல், குளங்களை ஆழமாக்குதல், உப மின் நிலையம் அமைத்தல், குடியிருக்க நிலமற்றோருக்கு அரச காணி வழங்கல், மயானம் புனமைத்தல் போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி இப் பேச்சுவார்த்தையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.


### 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சின்னத்தம்பி வயிரமுத்து**

மண்: 08-10-1918
விண்: 07-04-1986

எங்கள் குடும்பத்தின் தலைவனாய், வழிகாட்டியாய், ஒளிவிளக்காய் அன்புடனும் பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழவைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி,
பிள்ளைகள் மருமக்கள்,
சகோதரிகள்.

குளத்தடி வீதி,
சங்கானை. C 2168


# பட்டியலில் உங்கள் பெயர்உள்ளதா?
# உணவு முத்திரைகள் ஜூன் 18 முதல் 20வரை

[கொழும்பு]

புதிய உணவு முத்திரைகள் வழங்கும் பணிகள் ஜூன் மாதம் 15ம் திகதி முதல் 20ம் திகதிவரை மேற்கொள்ளப்படவுள்ளன.

இம்முத்திரைகளைப் பெறத் தகுதியுடையோர்பற்றிய பட்டியல் உதவி அரச அதிபர் பணிமனைகள், கிராமசேவை அலுவலர் அலுவலகங்கள், தபாற்கந்தோர்கள், கூட்டுறவுக் கடைகள் ஆகியவற்றில் இம்மாதம் 12ம் திகதி முதல் 23ம் திகதிவரை வைக்கப்பட்டிருக்கும். இம்முத்திரைகளைப் பெறத் தகுதியுடையோரின் பெயர்கள் இதில் இல்லாவிட்டால் இம்மாதம் 23ம் திகதிக்கு முன்னர் அவ்வப்பகுதி உதவி அரச அதிபர் அலுவலகங்களில் முறைப்பாடு செய்யலாம்.

தகுதியிருந்தும் தமது பெயர் சேர்த்துக்கொள்ளப்படாதவர்களைப் புதிதாகச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஜூலை மாதத்திற்குப் பின்னர் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [செ]


### நன்றி நவிலல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான 29சிறி 7780 இலக்க மினிபஸ் கடந்த எட்டு மாதங்களுக்குமுன் இன்னொரு இயக்கத்தினால் பறிக்கபபட்டு தற்போது எமக்கு மீட்டுத்தந்த புனிதமான இயக்கத்தினைச் சார்ந்த தலைவர்கட்கும் இளைஞர்கட்கும் பூநகரி வாழ் ஏழை விவசாயிகள் பாட்டாளிகள், தொழிலாளிகள் அங்கத்தவர்கள் சார்பில் நன்றி கூறுகிறோம். கடந்த எட்டுமாதங்களாக எமது பகுதி விவசாயிகள், தொழிலாளிகள் பாட்டாளிகள் தங்கள் விளை பொருட்களைக் கிளிநொச்சி சந்தைக்கு எடுத்துச் செல்வதில் சொல்லொணக் கஷ்டத்தை அனுபவித்தார்கள். இலங்கைப் போக்குவரத்துச் சபையின்பஸ்சேவையற்ற எமது பிராந்திய மக்கள் கூட்டுறவு இயக்கமூலமான எமது பஸ்சேவை மூலம் பெரு நன்மை அடையும் இலச்கு மீண்டும்மாற்றப்பட்டதுகண்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் மீண்டும் மீண்டும் நன்றி கூறுகிறார்கள். மக்களுக்கு சேவையில் தன்னை அர்ப்பணித்துள்ள கூட்டுறவு இயக்கத்தின் சொத்துக்கள் தொடர்ந்து பாதுகாக்க உறுதி பூணுவோமாக.

இங்ஙனம்,
கூட்டுறவுச் சேவையிலுள்ள
நெறியாளர்குழு
உறுப்பினர்கள்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
பூநகரி ப, நோ. கூ.
சங்கம்.

(A642)


## இலக்கணச் சுவாமிகள் குருபூசை

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் [இலக்கணச்சுவாமிகள்] குருபூசை கடந்த சனிக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயத்தில் கொண்டாடப்பட்டு சுவாமிகளின் படமும் திரைநீக்கப் செய்யப்பட்டது.

அன்றையதினம், இலக்கணச்சுவாமிகளின் குலதெய்வமான ஞானவைரவர் கோவிலில் விசேஷ பூசையும் இடம் பெற்றது.


### 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் அப்பாத்துரை பாலசிங்கம்**

(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி, பருத்தித்துறை)

தோற்றம்: 06-04-1902
மறைவு: 07-04-1986

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 7-5-1986 புதன் கிழமை தெணியம்பையிலுள்ள எமது இல்லத்தில கிரியைகள் நடைபெற்று ஊறணியிலுள்ள தீர்த்தக் கடற்கரையில் காலை 7 மணிக்கு அஸ்தி கரைக்கப்படும் இக்கிரியையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியையில் நேரில் கலந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் உதவிகள் புரிந்த அனைவற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தெணியம்பை,
வல்வெட்டித்துறை.
4-5-1986 [C 2173]

### பணிவான வேண்டுகோள்

16-04-86ல் எமது E. L. F. றக் பொடி அடித்தது (இல. 28 ஸ்ரீ 3841) நீல நிறம் உடையது. இயக்கத்தின் பெயரைச் சொல்லி எடுந்து, உடன் 2 மணித்தியாலத்தில் திருப்பித் தருவதாகக் கூறிச் சென்றவர்கள் இதுவரையும் திருப்பித்தரவில்லை, புனித இயக்கங்கள் இதில் முயற்சித்து எனது வாகனத்தை மீட்டுத்தருமாறு மிகவும் பணிவாக வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
**பா. விக்னராசா,**
வாரிவளவு, காரைநகர். [C-2165]

### பணிவான வேண்டுகோள்

19-04-86ல் எமது றக்டர் (இல. 37 ஸ்ரீ 4161) M. F. 240 சுப்பர் பெட்டியையும் (நீலம்) (இல 55 ஸ்ரீ 4479) இயக்கத்தின் பெயரைச் சொல்லி எடுத்துச் சென்று மறுநாள் காலை 10 மணிக்குத் திருப்பித்தருவதாக உறுதிசெய்தவர்கள் இதுவரை திருப்பிச் தரவில்லை. புனித இயக்கங்கள் இதில் முயற்சித்து எனது றக்டரையும், பெட்டியையும் தயவுசெய்து மீட்டுத் தருமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

**இ. சிவராசா,**
காரைநகர். [C-2164]


## விமானக்குண்டு---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வுள்ளன.

இவ்விபத்தையடுத்து ஏயர் லங்கா விமானங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது என எயர் லங்கா தலைவர் காப்டன் விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளாராயினும் அதுபற்றிய மேலதிக தகவல்களை அவர் வெளியிடவில்லை.

### 'எதுவும் கூறமுடியாது'

இந்த விபத்துப்பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு வரும் குழுவின் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் விசாரணைகள் தற்போது ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன. அதனால் இவ்விபத்து எதனால் நேர்ந்தது, எவரால் மேற்கொள்ளப்பட்டது என்பதை இப்போதே நிச்சயப்படுத்திக் கூறமுடியாது' என்று கூறினார். [ய செ]

## ஆலங்கேணியில்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆலங்கேணியைச் சேர்ந்த இவ்விரு இளைஞர்களும் தம்பலகாமத்திலிருந்து வந்துகொண்டிருந்தபொழுது கைதுசெய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் சிலமணி நேரம் பதற்றம் நிலவியது.

கைதுசெய்யப்பட்டவர்களுள் ஒருவர் மோகனசிங்கம் என்றழைக்கப்படுபவர். மற்றவர் பெயர் தெரிவிக்கப்படவில்லை. (மா)

## கோவிலும்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்துச்சிதறியதால் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அண்மையிலிருக்கும் பத்திரகாளி கோவிலும், ஆலடிப் பிள்ளையார் கோவிலும் சேதமடைந்தது ன் ஆலயங்களிலுள்ள திருவாசிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இவ்விபத்து நடந்ததும் இதனைத் தொடர்ந்து நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியானதும் தெரிந்ததே. (மா)

## 16 வீடுகளில்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

16 வீடுகளில் சட்டவிரோத மின் இணைப்புக்களை அகற்றினர்.

சட்டவிரோத மின்பாவனைக்குப் பாவிக்கப்பட்ட வயர்களையும் கைப்பற்றினர்கள்.

பொதுமக்கள் கொடுத்த தகவல்களைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## இலங்கை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

### வாஜ்பாய் கருத்து

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான திரு. வாஜ்பாய் உரையாற்றுகையில், ஒரு லட்சத்துக்குமதிகமான தமிழ் அகதிகள் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இவ் வேளையில் இலங்கைப் பிரச்னையில் தலையிட இந்தியவுக்கு உரிமையுணடு என வலியுறுத்தினார்.

தமிழ் மக்களின் குறிக்கோளுக்கு ஆதரவும் ஆக்கமும் ஊக்கமும் வழங்க தேசிய ரீதியில் ஒன்றிணைப்புக் கமிட்டி ஒன்றும் இம்மாநாட்டின் சார்பில் நியமிக்கப்பட்டது.

### 2-ம் மாநாடு

இலங்கைத் தமிழர்க்கு ஆதரவு தெரிவிக்கும் 2-வது மகாநாட்டை ஆந்திராவில் நடத்த விரும்பினால் அதற்குத் தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக ஆந்திர முதல்வர் ராமராவ் இம்மகாநாட்டில் கூறினார்.

இலங்கைக்கான உதவிகளை உலக நாடுகள் நிறுத்திக் கொள்ளவேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்றும் இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. [ய-செ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய பலன்

மாதம்- சித்திரை
திகதி- 23(1986-5-6)
கிழமை- செவ்வாய்
திதி- திரயோதசி பி இ, வரை
நட்சத்திரம்- ரேவதி பி. இ. வரை

மேடம்; ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டிலுள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக்கிடைக்கும். இருமனம் கலந்தவர்களின் மத்தியில் இனிமை தென்படும்.

இடபம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவிசெய்யப் போய் உபத்திரவத்தைத் தேடி கொள்வீர்கள். பேச்சில் நிதானம் வேண்டும்.

மிதுனம்: உறவுகள் பலப்படும், உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கு வழிபிறக்கும். உவப்பான தினம்.

கடகம்: நல்ல காரியங்களைச் செய்வீர்கள். தொழில் புரியுமிடத்தில் பாராட்டுக்கள்கிடைக்கும். இன்று சுபநாள்.

சிங்கம்: பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடையுமுண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறிபோகும்

கன்னி: இனிமையான சம்பவங்கள் இன்று இல்லத்தில் இடம்பெறும். வெளியிடத்துத்தொடர்புகள் பெருகும். இனசனஉதவியுமுண்டு.

துலாம்: முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை தோன்றும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலர் கடன்படவும் நேரும்.

விருச்சிகம்: நீண்டநாள் பிரச்னையில் சமரச முடிவு காணப்படும். பொதுப்பணியில் ஈடுபாடு ஏற்படும். இறையருளும் உண்டு.

தனுசு: தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் மேலதிகாரிகளின் பாராட்டுகளுக்கு இலக்காகுவீர்கள். சிலருக்கு திடீர் பயணமும்உண்டு

மகரம்: பொருளாதார நிலை சீரடையும். சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவிற்குமிடமுண்டு. வெளியூர்ச் செய்திக்குமிடமுண்டு.

கும்பம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும். உடல் நலம் பாதிக்கப்படும் வினைபொருள்களினால் பணம்விரயமாகும்.

மீனம்: மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம். அன்புச் சகோதரத்தின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## வேலணையில் விசர்நாய்க்கடி தடுப்பு ஊசித் திட்டம்

(வேலணை)

வேலணை - கிழக்குப் பகுதியில் விசர்நாய்க்கடித் தொல்லையில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் வராமல் தடுப்பதற்கான தடை ஊசி மருந்துகளை ஏற்றுவதற்கு வேலணை கிழக்கு சுகாதாரப் பரிசோதகர் திரு. சி. சிவசுப்ரமணியம் நடவடிக்கைகளை எடுத்துள்ளார். இதன் பிரகாரம் எதிர்வரும் 7-ம் திகதி புதன்கிழமை முதல் ஒரு வாரத்திற்கு இப்பகுதிகளில்இத் தடை ஊசி மருந்துகள் நாய்களுக்கு ஏற்றப்படவுள்ளது.

7-ம் திகதி புதன் கிழமை வேலணை அரசினர் வைத்தியசாலை, வேலணை மிருக வைத்தியர் காரியாலயம் ஆகியவற்றிலும், 8 ம் திகதி வியாழக்கிழமை வேலணை கலைமகள் சன சமூக நிலையம், வேலணை நேதாஜி சன சமூக நிலையம் ஆகியவற்றிலும், 9 ம் திகதி வெள்ளிக்கிழமை வேலணை தேவி தோட்டம் ச. ச. நிலையம், வேலணை துறையூர் சர்வோதய நிலையம் ஆகியவற்றிலும், 10 ம் திகதி சனிக்கிழமை வேலணைசோளாவத்தை ச.ச நிலையம், வேலணை ஆலம்புலம் முருக மூர்த்தி கே விலடி ஆகியவற்றிலும் ஊசி ஏற்றப்படும்

## பண்டத்தரிப்பு மக்கள் ஐக்கிய நாணய சங்கம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மக்கள் ஐக்கிய நாணய சங்கம் என்ற பெயரில் புதிய சங்கம் ஒன்று அண்மையில் பண்டத்தரிப்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. சங்க உறுப்பினர்களுக்கு அத்தியாவசிய தேவைகளுக்காக குறைந்த வட்டியில் கடன் வழங்குவதும், அரசினரின் புதிய திட்டத்திற்கிணங்க வீடமைப்புக் கடன்களை வழங்குவதுடன் மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதுமே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது சங்க நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: ரு ஏ. வி. துரையப்பா, உபதலைவர்: திரு. எஸ். ஜெபரத்தினம், செயலாளர் திரு, சி. குணரத்தினம், உப செயலாளர்: திரு. கிளமண்ட் செல்வரத்தினம், பொருளாளர்; திரு. எஸ் சுந்தரமூர்த்தி செயற்குழு உறுப்பினர்களாக எட்டுப்பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## பனம் பொருள் தொழில் நுட்ப பயிற்சி

[கொழும்புத்துறை]

வெளிநாடுகளுக்குச் சென்று பனம்பொருள் தொழில் நுட்பத் துறைகளிலான விசேட பயிற்சிகளைப் பெறுவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உலக உணவு விவசாய நிறுவனம் பனை அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர்களுக்குஉபகாரச்சம்பளம்வழங்குமென்றும் அறிவித்துள்ளது பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு கே. நடராசாவின் முயற்சியின் பயனாக ஐ. நா. உலக உணவு விவசாய நிறுவனம் இவ் உபகாரச் சம்பளத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளது.

அடுதத மாதம் பனை அபிவிருத்தச்சபையின் மூன்று நிறைவேற்று உத்தியோகத்தர்களும ஆறு விரிவாக்க உதவியாளர்களும் ஒருமாதகால பயிற்சியை மேற்கொள்ளும்முகமாக இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ இராசதுரை கொழும்பில் இம்மாதம் நடைபெறவுள்ள ஏற்றுமதிக்கண்காட்சியில் உபகாரச் சம்பள அங்கீகாரச் சான்றிதழ்களை வழங்குவார்.

## கால் நடைகளைத் தரமுயர்த்தப் புதிய முறை

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளை (ஆடு, மாடு) தரமுயர்த்தும் நோக்கத்துடன் புங்குடுதீவு கமத்தொழில் சேவா நிலையத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பகுதியினர் ஒரு செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்தினைத் திறந்துள்ளனர்.

மேற்படி செயற்கை முறைச் சினைப்படுத்தல் வழியைப் பின்பற்றி தமது கால்நடைகளின் தரத்தை மேம்படுத்திப் பயன் பெறுமாறு இந் நிலையப் பொறுப்பாளர் அனைத்துக் கால்நடை வளர்ப்பாளர்களையும் வேண்டிக்கொண்டிருக்கிறார்.

(ஷ)

## இன்று சுதுமலை அம்பாள் மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 22-ம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 23-ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

## சட்டவிரோத மின் பாவனையால் அவதி

[ஒட்டுசுட்டான்]

மண்கும்பான் பகுதியில் சட்டவிரோதமாக மின் பாவனை பெறுபவர்கள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இதனால் இங்கு அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதுடன் குடிதண்ணீர் பெறுவதும் கஷ்டமாகவுள்ளது, என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இந்து இளைஞர் கொடி தினம்

(யாழ்ப்பாணம்)

இந்து இளைஞர் பேரவையினால் வருடாவருடம் நடாத்தப்படும் இந்து இளைஞர்கொடி நாள் இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பிப்பதற்கு யாழ் மாவட்டத்திலுள்ள இந்துஇளைஞர் பேரவை தீர்மானித்துள்ளது.

இக்கொடி தினத்தை ஒட்டி சகல இந்துமன்றங்களும் பாடசாலைகளும் தமக்குத் தேவையான கொடிகளையும், உண்டியல்களையும் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பெற்றுக்கொள்ளுமாறு ாத்திதின அமைப்பாள திரு. இ. தவகோபால் அறிவித்துள்ளார்.

## வகுப்பறை மண்டபம்

[பண்டத்தரிப்பு]

மாதகல் புனித சூசையப்ப மகாவித்தியாலயத்தில் நிலவும் மாணவர் இடநெருக்கடியை நீக்குவதற்கு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் புதிய வகுப்பறை மண்டபம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இங்கு நீண்டகாலமாக நிலவும் இடநெருக்கடி பற்றி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்கம் யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு பல தடவைகள் சுட்டிக்காட்டியதையடுத்து இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

மினிவான் ஒன்று தந்திக்கம்பம் ஒன்றில் மோதி விடத்துக்குள்ளானதை அடுத்து தந்திக்கம்பம் முறிந்ததினால் பண்டத்தரிப்புக்கான தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி தொடர்பை மீண்டும் ஏற்படுத்துவதற்கு புதிய தந்திக்கம்பத்தை யாழ் நகரிலிருந்து எடுத்து வந்து பொருத்துவதற்கு வாகன வசதி இல்லாதிருப்பதாகவும் யாராவது பொதுநல இயக்கங்கள் வாகன வசதி செய்து இந்த தந்திக்கம்பத்தை கொண்டுவந்து சேர்க்க உதவும் பட்சத்தில் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும் என்றும் பண்டத்தரிப்பு தபால் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## மின் மாற்றி பழுதடையும் அபாயநிலை

[பண்டத்தரிப்பு]

இளவாலையிலுள்ள மின் மாற்றி சாதனம் அதிகரித்த மின்வலுவை தாங்கமுடியாது பழுவடையும் அபாய நிலையிலிருந்து வருவதாகவும், இதனைத் தவிர்த்து இளவாலைக் கிராமம் முழுவதும் இருளில் மூழ்காது பாதுகாப்பதற்கு பொதுமக்களை ஒத்துழைக்குமாறும் இளவாலை மின் பாவனையாளர் சங்க விழிப்புக்குழு விடுத்துள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவித்துள்ளது

தற்போதைய சூழ்நிலையில் மின்மாற்றி சாதனங்கள் பழுதடைந்து எரிந்து விடும் பட்சத்தில் புதிய மின் மாற்றியையும் மின்சாதனங்களையும் திரும்பவும் பெற வருடக்கணக்கில் காத்திருக்க வேண்டும்என்றும், ஆகவே பொதுமக்கள் இரவு நேரங்களில் உயர்ந்த வலுவுள்ள மின் சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்வதுடன், சட்ட விரோத மின்இணைப்பு செய்திருப்பவர்கள் உடனடியாக சட்டரீதியான முறையில் மின்சாரத்தைப்பெற முயற்சிக்க வேண்டுமென்றும் தொழிற்சாலை நடத்துவோர் மாலை 6 மணிக்குப் பின்பு மின்சாரத்தை உபயோகப்படுத்த வேண்டாம் என்றும் மேற்படி துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு போட்டி நடத்த முடிவு

(உடுவில்)

உடுவில் தெற்கு சத்தியபுரம் கிராமத்தில் உள்ள சிற்றாலயத்தில் இயங்கி வரும் சிறுவர் பராமரிப்பு நிலைய பெற்றோர் ஆசிரியர் கூட்டம் அண்மையில் நடைபெற்றது

சிற்றாலய நிலைய உதவி ஊழியர் திருமதி ஏ. ஆர் தம்பியப்பா கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

மேற்படி சிறுவர் பராமரிப்பு நிலைய சிறுவர்களிடையேயான இல்ல விளையாட்டு போட்டியொன்றை மே மாதம் 15 ம் திகதி நடத்துவதென்றும், திருச்சபையின் வருடாந்த விற்பனை விழாவினை மே மாதம் 17 ம் திகதி நடாத்துவது எனவும், அதே திகதியில் சிறார்களின் தைய பொருட்காட்சியொன்றை நடத்துவதெனவும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டன.

சத்தியபுரம் ''சிறுவர் பூங்கா'' விளையாட்டு மைதானத்தை சத்தியபுரம் கிறிஸ்தவ வாலிப சங்க அங்கத்தவர்களும் ஓய்வு நாள்ப் பாடசாலை மாணவர்களும் சிரமதான அடிப்படையில் துப்பரவு செய்து அமைத்துள்ளனர்.

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

நாயன்மார்கட்டு பாரதிமன்றம் சனசமூக நிலையம் வடமாகாண விளையாட்டுக் கழகங்களிடையே ஆறுபேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியொன்றினை நடாத்தவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2-00 மணி தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு யாழ். மாநகர சுகாதாரப்பகுதியினரால் தடுப்பூசி போடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்து மயானத்தில் புதியமடம்

(பண்டத்தரிப்பு)

யாழ் அபிவிருத்திச் சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலக பகுதியிலுள்ள வழுக்கையாறு இந்து மயானத்தில் புதிய சுடலைமடம் ஒன்று விரைவில் அமைக்கப் படவுள்ளது. யாழ் அபிவிருத்திச் சபையின் 1986-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் இதற்கென 28 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சீருடைத் துணிகள் வழங்கப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடமை புரியும் சிற்றூழியர் பலருக்கு சென்ற 1985ம் ஆண்டுக்கான சீருடைத்துணிகள் இதுவரையும் வழங்கப்படவில்லை எனத்தெரியவருகிறது.

சமையற்காரர், காரியாலய சேவகர்கள், காவற்காரர்கள் சுகாதாரத் தொழிலாளர்கள் ஆகிய சிற்றூழியர்களுக்கு வருடா வருடம் சீருடைக்கான துணிகள் வழங்கப்படுவதாகவும் சென்ற வருடத்துக்கான துணிகள் பல ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

[ஜ]

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

அரியாலை மணிப்புரியில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலையத்தின் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு திரு க. செல்வரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

புதிய உத்தியோகத்தர் விபரம் பின்வருமாறு: போஷகர். டி. பி. இமானுவல், தலைவர் க. விஜயரட்ணம், உபதலைவர் யோ. தேவசகாயம்; செயலாளர்: க. பாலசுப்பிரமணியம், உபசெயலாளர்: ஏ. ராஜன், பொருளாளர்: எஸ். சக்திவேல், உபபொருளாளர்: ஏ. ஜீலன், மற்றும் ஏழுபேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டன .(ஐ)

## தேவார மனனப் போட்டி

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினர் ஆனைக்கோட்டை வாசிகளுக்கும் அப் பகுதியில் அமைந்திருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் தேவார மனனப் போட்டி ஒன்றினை இம்மாதம் 22 ம் திகதி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

## அருளாளர் ஒன்றுகூடல்

(வண்ணார்பண்ணை)

அகில உலக அருள்நெறி மன்றத்தின் இலங்கைக் கிளை நடாத்தும் அருளாளர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி எதிர்வரும் சனிக்கிழமை சித்தங்கேணி கணேச வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்வைபவத்தை யாழ் கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கவுள்ளார், திரு கோ க,வேலாயுதம் தலைமையில் நடைபெறும் இந்த ஒன்றுகூடல் வைபவத்தில் பிராந்திய உபகுழுக்கள் அமைத்தல், பிரசாரக்குழு அமைத்தல் ஆகிய நிகழ்ச்சிகளும் மனிதத்துவம், நாட்டுப்பற்று, அருளியல், கல்வி தொடர்பான கருத்தரங்குகளும்நடைபெறவுள்ளன.

[இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ அலுவலர் பதவி: டாக்டர் சுகந்தன் விடுத்துள்ள அறிக்கை

[பண்டத்தரிப்பு]

கைதடி அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலையில் டி. ஏ. எம். தராதரம் பெற்ற டாக்டர் ஒருவருக்கு மருத்துவ அலுவலர் பதவி வழங்கியிருப்பது நியாயமானது என்றும், டி. ஏ. எம். பட்டதாரிகள் உள்ளூராட்சிமன்றங்கள் நடாத்தும் ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும், அரசாங்க சுதேச வைத்தியசாலைகளிலும் வைத்தியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பதவி வகித்து வருகின்றார்கள் என்றும் வடஇலங்கை சித்தஆயுள்வேத வைத்தியர் சம்மேளனத்தின் அமைப்பாளரும், யாழ். லங்கா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரிவிரிவுரையாளருமாகிய டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

கைதடி சித்தஆயுள்வேத வைத்தியசாலையில் டி. ஏ. எம். தராதரம் பெற்ற டாக்டர் ஒருவருக்கு மருத்துவ அலுவலர் பதவி அண்மையில் வழங்கப்பட்டுள்ளதை ஒரு பகுதியினர் ஆட்சேபித்திருப்பதையிட்டு டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி இந்தஅறிக்கையை வெளியிட்டுள்ளார் டி ஏ.எம் பட்டதாரிகளை உருவாக்கும் யாழ்ப்பாணம் லங்கா ஆயுள் வேதக் கல்லூரியின் அதிபர், விரிவுரையாளர்கள் ஆகியோர் கொழும்பு அரசாங்க ஆயுள் வேதக் கல்லூரியில் பட்டம் பெற்று வெளியேறியவர்களே என்றும் யாழ்.லங்கா ஆயுள் வேதக்கல்லூரி இலங்கையில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி என்றும் இங்கு இறுதிவகுப்புப் பரீட்சையும் சுதேசவைத்திய அமைச்சினுலேயே நடாத்தப்பட்டு வருகின்றது என்றும் இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிராம அபிவிருத்தி சங்க கூட்டம்

(சித்தன்கேணி)

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொதுக் கூட்டங்களைக் கூட்டுவதற்குரிய நடவடிக்கைகளில் கிராம அபிவிருத்தி அதிகாரி உதவி கிராம அபிவிருத்தி அதிகாரி ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொதுக்கூட்டங்களைக்கூட்டி புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்யுமாறு கிராம அபிவிருத்தி அதிகாரி திருமதி பொ. சிவானந்தம் சகல கிராம மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

அநேகமான கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஒரு வருடத்திற்கு மேலாகப் பொதுக் கூட்டங்களைக் கூட்டாமல் இருப்பதனுலேயே உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்தின் பணிப்பின் பேரில் கிராம அபிவிருத்தி அதிகாரி. உதவி கிராம அபிவிருத்தி அதிகாரி ஆகிய இருவரும் துரிதகதியில் வேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வரப் பெற்றேம்

திருமுறைத் தொண்டரும் சமூகப் பணியாளருமாகிய ஆசிரியர் திரு. மு. கிருஷ்ண பிள்ளை அவர்களின் பணிகளைப் பாராட்டும் வகையில் வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச் சபையினரின் நிலையக் குரல் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் அபிடேகப் பலன்கள், திருக்கோயில், சிவ சிந்தனைகள், அம்பாளை உபாசிப்பதன் பலன் என்னும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன இக்கட்டுரைகளில் உள்ள ஒவ்வொரு வாக்கியங்களுமே, அறிவை விருத்தி செய்வதாயும் சிந்தனையைத் தூண்டுவதாயும் உள்ளன.

'திருக்கோயில்கள் - சிவ சிந்தனை' என்னும் கட்டுரை, கோயில் அமைப்பு - மடைப் பள்ளி, அந்தணர், வேலையாட்கள் தொண்டர், முதலிய 11 பகுதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் இக்காலத்தில் உடனடியாகப் பின்பற்ற வேண்டியனவாகும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக திருமுறை முதலிய அருட்பாக்களை ஆத் மார்த்தமாகவும் உலகோபகாரமாகவும் பாடிவரும் தொண்டரின் சிறப்பை மதிக்கும் வகையில் மேற்படி சபையின் வெளியீடு பயனுள்ள முயற்சியே. (ப)

# ஏயர் திறைஸ்'டார் வெடிப்பு: "எரிந்த நிலையில் பயணிகள் ஓடி வந்தனர்"

## மரணவிசாரணையில் சாட்சியம்

(கொழும்பு)

விமானத்திலிருந்து பத்து யார் தூரத்தில் நான் நின்றேன், அவ்வேளை பேரொலியுடன் அந்த விமானம் வெடித்து அதன் வாற்பகுதியுடன் இருவேறுதுண்டுகளாக பிளந்து தீப்பற்றிக்கொண்டது. அதேநேரம் தீப்பற்றி எரிந்தநிலையில் பிரயாணிகள் சிலர் 'டேர்மினல்' அறையை நோக்கி ஓடிவருவதைக் கண்டேன்.''

கடந்த சனியன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குண்டுவெடிப்பினல் சிதைந்த ஏயர்லங்கா 'திறைஸ்டார்' விமானத்தில் பலியானவர்களின் மரணவிசாரணை கடந்த ஞாயிறன்று நீர்கொழும்பு பதில் நீதவான் திரு எல். பி. ஈ கருணரத்தின முன்னிலையில் நடந்தபோது, ஏயர்லங்கா உதவி முகாமையாளர் ஜனுப் முகமது நுனில் சபில் பச்கீர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

தொடர்ந்து அவர் சாட்சியமளிக்கையில், ''இந்த 'திறைஸ்டார்' விமானம் லண்டனிலிருந்து யூ எல் 512. என் இலக்கத்துடன் காலை 8.20 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தது. இது யூ.எல். 101 என்ற இலக்கத்துடன் 9.15 மணிக்கு மீண்டும் மாலைதிவு செல்லவிருந்தது. விபத்து நடந்தசமயம் 100பேர் வரையில் விமானத்தில் இருந்தார்கள். அதில் 39 பேர் வெளிநாட்டவர்கள்'' என்ருர்.

இவ்விபத்தின்போது 22 பேர் பலியானதாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அதில் 16 பேர் வரையில் இனங்காணப்பட்டுள்ளனர்: பலாஸ்(பிரான்ஸ்) பிராங் சியிடோ [ஜப்பான்], மிசுசாசா [யப்பான்], ரகுமான் [ மாலைதிவு], ஜனுபா ஷியர்குல் ஹுசைன் [மாலைதீவு]பி ரி,குணசேன, ஜினதாச (இலங்கை), ஜோஹன் சின்சி (இலங்கை. மக்யோர்சன் (மனைவி,பிள்ளை உட்பட பிரிட்டன்], பி ராவேல் (பிரான்ஸ்) திருமதி எம். ராவல் கார்ட்டன், ஓமர் சாலேல், திருமதி டனெட், ஆகியோர் மேற்படி விபத்தின்போது பலியாகியிருக்சலாம் என்று அஞ்சப்படுகிறது.

இவ்விபத்து குறித்து விசாரணைகளுக்கு உதவ ஏயர் லங்கா நிறுவனக்குழுவுடன் இலங்கை - மாலைதிவு விமான சேவை முகாமையாளர் மற்றும் ஏயர்லங்கா தொழில் நுட்ப பொறியியலாளர் திரு. கே. பூபதி, திரு. ஆர். வி. சண்முகநாதன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை வெடிக்க வைக்கப்பட்ட குண்டின் தன்மை பற்றி ஆராய பிரிட்டன் தொழில்நுட்ப நிபுணர் குழுவொன்றை இலங்கை அரசு உதவிக்கு அழைத்துள்ளது. இக்குழுவே இந்திய 'கனிஸ்கா' விமானம் அத்திலாந்திக் சமுத்திரத்தில் விழுந்தபோது ஆராய்ச்சிகளை மேற்கொண்ட குழுவாகும்.

இது இவ்வாறு இருக்க தற்போது ஏயர்லங்கா விமான நிலையம் பாதுகாப்பு நடவடிக்கைகளை புதியவழி வகைகளைக் கயாண்டு தீவிர படுத்தியுள்ளது. அதாவது;

பொதிகள் விமானத்தில் ஏற்றுவதற்கு முன் 48மணி நேரம் விமானத்தளத்தல் வைத்திருக்கப்படவேண்டும்

எந்நேரத்திலும் பொதிகள் சடும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும்

உடன் கொண்டுசெல்லும் பொதிகள் பிரயாணிகள் அருகிலிருந்து அடையாளம் காட்ட வேண்டும்.

உணவு தயாரிப்பு உபகரணங்கள் அனைத்தும் பரிசோதிக்கப்படும்'' என்பனவாகும். (ய-பி)

## "வகித்த பதவிக்கு மதிப்பு ஏற்பட வாழ்ந்தவர்"

[மண்டைதீவு]

''எந்தப்பதவியை நாம்வகித்தாலும் அந்தப் பதவியால் எமக்கு புகழ்தேட முயல்வதைவிட வகிக்கும் அப்பதவிக்கு மதிப்பு ஏற்படும் வகையில் நாம் அப்பதவியை பாதுகாப்பதே சிறந்தபண்பாக அமையும். இந்த உயர்ந்த நிலையை எடுத்துக்காட்டி வாழ்ந்த ஒரு பெருமகன் அமரர் திரு. இராகந்தையா என்ருல் அதுமிகையாகாது. அவரது பண்பும், சேவையில் அவர் காட்டிய தியாகமும், வழிமுறைகளும், இலட்சியப் போக்கும் அவர் வகித்தபதவிகளுக்கு பெருமதிப்பைத் தேடிக் கொடுத்துள்ளது''

என்று மண்டைதீவு சமாதான நீதவானும், சமூகசேவையாளருமான திரு இராகந்தையா [கலங்காமு] நினைவுமலர்வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வேலணை முன்னள் கிராமோதயசபைத்தலைவரும், வேலணை கிழக்கு மகாவித்தியாலய உப அதிபருமான திரு ச. ஈணிக்கவாசகர் தெரிவித்தார்.

மண்டைதீவு இணக்கசபையின் தலைவர் திரு. இ. நா. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு வைபவத்தில் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், அரசியல் பிரமுகர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

மண்டைதீவு ''மணிமகால்'' இல்லத்தில் இடம் பெற்ற இந்த நினைவுமலர் வெளியீடு இணக்கசபையினல் நடத்தப்பட்டது. இம்மலரின் முதல் பிரதியை திருமதி அதிஜெயமணி கந்தையாவிடம் வழங்கி சபைத்தலைவர் வெளியீட்டைத் தொடக்கிவைத்தார்

தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில்கலந்து கொண்டுஉரையாற்றிய யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின் முன்னுள் உறுப்பினர் திரு. க. சின்னத்துரை மக்கள்சேவைக்கென்றே தன்னை அர்பணித்து வாழ்ந்த பண்பாளர் அமரர் திரு. கந்தையாவின் மறைவு இன்றைய நம்நிலையில் தமிழ்மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத ஒரு இழப்பாகும் என்ருர்.

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திருதி சி.சண்முகலிங்கம்,பேரவையின் தொண்டர்சேவை ஆணையாளர் திரு. இ. சுவாமிநாதன் ஆகியோர்உட்படப்பலர் உரையாற்றினுகள்ர்.

அன்று காலை இடம் பெற்ற அஸ்திஊர்வலத்தில் பொதுமக்கள் அதிகமாகக் கலந்துகொண்டனர்.

## மக்களின் விரக்தி நிலையை போக்குவதே நோக்கம்

(கொழும்புத்துறை)

''பல்வேறு காலகட்டத்திலும் பின்தங்கிய நிலையிலிருக்கும் மக்களின் சுபீட்ச வாழ்விற்கு உதவ எல்லோரும் முன்வரவேண்டும். கல்வி, பொருளாதாரம் தொழில் வாய்ப்பு ஆகியவற்றில் பின்தங்கியிருப்பவர்கள் விரக்தியிலேயேவாழ வேண்டிய நிலையிலுள்ளனர். இந்த அவலநிலையைச் சமூகத்திலிருந்து போக்குமுகமாகவே எமது கழகம் பல திட்டங்களை முன்வைத்துச் செயற்படுத்தி வருகின்றது''

இவ்வாறு யாழ் மாவட்ட சமூக அபிவிருத்திக் கழகத்தின் நான்காவது வருடாந்த பொதுகூட்டத்தில் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப்பேசிய கழகச்செயலாளர் திரு வீ இராஜதுரை கூறினர். திரு, மா. கந்தசாமி தலைமையில் இப்பொதுக்கூட்டம் நடைபெற்றது

திரு. இராஜதுரை தொடர்ந்து பேசுகையில் ''யாழ். மாவட்டத்தில் கஷ்டமுறும் மக்களுக்காக எமது கழகம் குரல்கொடுத்து வருகின்றது. கிராமிய மட்டத்தில் கழகத்தின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதன் மூலமே பின்தங்கிய நிலையிலிருக்கும் மக்களுக்கு உதவமுடியும். இதனை நோக்கமாகக்கொண்டு நாம் புதிய திட்டங்களை உருவாக்கிக் கழகத்தின் சேவைகளைப் பன்முகப் டுத்தி வருகின்ரேம்'' என்ருர்.

யாழ், மாவட்ட அபிவிருத்திச்சபை முன்னுள் தலைவர் ஆ ந இராஜேந்திரம் பேசுகையில்; ''வளர்முக சமூகமக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் காரணிகளை ஆராய்ந்து அவற்றைக் களையவேண்டியது இன்றைய நிலையில் மிகவும் இன்றியமையாதது. இதற்கான நடவடிக்கைகளைக்கழகம் மேற்கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டா

திரு. க. வைரமுத்து, திரு. பீதாம்பரம், திரு. ஜே அந்தோனிப்பிள்ளை, திரு சுந்தரம் ஆகியோரும் பேசினர்.

## பெருநாள் விழா

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு மத்தியில் எழுந்தருளியிருக்கும் பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தின் 9வது நாள் பெரு விழா இம் மாதம் 11 ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. வேற்படி விழா நிகழ்ச்சிகளை அருட்திரு ஜீவர் போல் அ ம் தி அடிகளார் நடாத்தி வைப்பார் 9வது நாளாகிய19ம்திகதியன்று திருப்பலி ஒதுதலும் திருச் சுற்றுப்பவனி வரும் காட்சியும் இடம் பெறும்.

## பனைவள ஆராய்ச்சிக்கு 17 பேர் கொண்ட குழு

(கொழும்புத்துறை)

இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் முகமாகப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும், பனைவள ஆய்வில் பல்வேறு துறைகளிலும் அனுபவம் பெற்றவர்களையும், சபை உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய 17 பேர் கொண்ட ஆராய்ச்சிக் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு பனம் பொருள் உற்பத்திகளின் தரங்களையும், பதனிடலையும் மேம்படுத்தும் விதத்தில் இக்குழு உடனடியாகத் தனது ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளது. தற்போது கைதடியில் உருவாக்கப்பட்டு. வரும் தேசிய பனைவள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையக் கட்டிடம் பூர்த்தியடைந்ததும் இவ் ஆராய்ச்சிப் பணிகளைத் தொடருவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளைமேற்கொள்ள இவ் ஆராய்ச்சிக் குழு முன்வந்துள்ளது

தற்பொழுது பாவனையிலிருக்கும் பனம் உற்பத்திகளான பனம் பாணம், கோடியல், பனம்ஜாம், சோஸ் போன்ற பனம் பழத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும், உணவுப் பொருட்களையும், பதநீர், பனம் கோலாரொபி பாம் வைன், மதுபான வகைகள் போன்றவற்றையும், மற்றும் பல்வேறு கைப்பணிப் பொருட்களையும் ஏற்றுமதிக்கேற்ற தரத்தில் பேணுவதிலும் நவீனமயப்படுத்தலிலும் இவ் ஆராய்சிக் குழுவினர் நான்கு பிரிவுகளாகத் தமது ஆய்வுகளை ஆரம்பித்துள்ளனர். யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலாநிதி. கே. தெய்வேந்திரராஜா, கலாநிதி. எஸ். கந்தையா, கலாநிதி. வி. கே கணேசலிங்கம், கலாநிதி. கே. பாலகிருஷ்ணன், திரு எஸ். மகேஸ்வரன், திரு. கே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் இக்குழுவிற்குப் பொறுப்பாக இருந்து செயற்படுவதென்றும், திக்கம் பனம் பொருள் பல் தொழில் தொகுப்பிலுள்ள சிறிய அளவிலான ஆய்வுகூடத்தைத் தற்காலிகமாகப் பயன்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே நடராசா தலைமையில் இந்த ஆராய்சிக் குழு செயலில் ஈடுபட்டுள்ளதற்கு பனம் பொருள் வள அபிவிருத்தித்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். வட மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சமாஜமும் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது,

## கோஷ்டி மோதல் மூடைதூக்கும் வயோதிபர் பலி

[யாழ்ப்பாணம்]

கல்வியங்காடு சந்தைப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு இரு கோஷ்டிகளிடையே மோதல் இடம்பெற்ற சமயம் கல்வியங்காடு சந்தை ஆடியபாத வீதிக் கடையொன்றின் வெளிப்புறத்தே நின்றிருந்த வயோதிபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்.

எஸ் ஆறுமுகம் (வயது 65) என்ற வயோதிபரே பலியானவராவார். இவர் சந்தையில் மூடை தூக்கும் வேலைசெய்பவராவார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 6-5-86

# ஷெல் தாக்குதல்: தேவாலயம் சேதம் வண.பிதா அதிர்ஷ்டவசமாக தப்பினர்

[வேலணை]

நேற்று முன்தினம் காரை நகர் கடற்படையினரால் ஊர்காவற்துறைப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் ஊர்காவற்றுறைப் பட்டினத்தில் இருக்கும் புனித தேவமாதா ஆலயம் சேதத்திற்குள்ளாகியுள்ளது அதனோடு இணைந்து இருந்த பங்குத் தந்தையின் வதிவிடமும் சேதமடைந்தது.

அதிர்ஷ்டவசமாகப் பங்குத் தந்தை அப்பொழுது அங்கு இருக்கவில்லை. சில நிமிடங்களின் முன்னர்தான் பங்குத் தந்தை வண. பிதா எவ். எஸ். கிருபானந்தன் இல்லத்திலிருந்து பின்புறம் சென்றிருந்தார். அவர் இருந்த காரியாலய மேசை மீதுதான் இந்த ஷெல் விழுந்தது குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் வளவிற்குள் நின்ற பல தென்னைமரங்களும் சேதத்துக்குள்ளாகியிருந்தன.

## கேதீச்சரம் உற்சவம்

[வண்ணார்பண்ணை]

திருக்கேதீச்சர ஆலய வருடாந்த உர்சவம் இம்மாதம் 14-ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது. வைகாசி விசாகத்தன்று தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

## மதிமுகராசாவை விடுவிக்க பிரஜைகள்குழு கோரிக்கை

[வண்ணார்பண்ணை]

அண்மையில் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்ட பொன். மதிமுகராசாவை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு தாவடிப் பிரஜைகள்குழு சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொன் மதிமுகராசா கடத்தப்பட்டமை பொதுமக்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும், பொதுத்துறையிலும் தன் முயற்சிகளை செய்துவந்த இவர் கடத்தப்பட்டது தாவடிப் பகுதி பொது ஸ்தாபனங்களுக்கு பெரும் கவலையைக் கொடுத்துள்ளதென்றும், இவர் சமூகசேவை ஸ்தாபனங்களுடன் தொடர்புகள் உள்ள ஒரு குடும்பஸ்தர் என்றும், இதல் சம்பந்தப்பட்டவர்கள் இவரை விடுவித்து உதவுமாறும் வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## முஸ்லிம்கள் வேண்டுகோள்

இலங்கை அண்ணா தி. மு. க. செயலாளர் பொன் மதிமுகராசாவை விடுதலை செய்யுமாறு சம்பந்தப்படடவர்களை யாழ் முஸ்லிம் மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

பொன் மதிமுகராசா முஸ்லிம் மக்களுக்கு பல உதவிகள் புரிந்தவர் என்றும் வெள்ளத்தால் சுமார் 40 தமிழ் முஸ்லிம் குடும்பங்கள் பாதிக்கப்பட்ட சமயம் ஒரு வாரத்திற்குரிய உணவுப் பொருள்களை வழங்கி உதவிசெய்தார் என்றும், பொம்மைவெளிப் பகுதியில் வாழும் மக்களுக்கு உதவிகள் புரிந்துள்ளார் என்றும், சிறுபராயம் முதல் அவர் முஸ்லிம் பகுதியில் கூடிய ஈடுபாடு உள்ளவரென்றும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்கபபட்டுள்ளது. [க]

## உற்சவம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அன்னை பத்திமா ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர் வரும் 12 ம் திகதி நற்கருணைப் பவனியும், 13 - ம் திகதியன்று திருப்பலிப் பூசையும் நடைபெறவும். உற்சவ ஒழுங்குகளை பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு ஜெயக்குமார் அகளார் கவனித்து வருகின்ருர்

## யாழ். வின்ஸர் சந்தியில் வவனியா வாகனங்கள்

யாழ். வின்ஸ தியேட்டர் சந்தியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாகனங்களில், வவனியா பிரஜைகள் குழுவின் முக்கிய பிரமுகர் ஒருவரின் வாகனமொன்றும் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இந்த வாகனம் பல மாதங்களுக்குமுன்பு மேற்படி பிரமுகரின் வீட்டிலிருந்து இனந்தெரியாத சிலரால் கடத்திச் செல்லப்பட்டதாம்.

இதனைத் தவிர வவனியாவைச் சேர்ந்த தனியாருக்குச் சொந்தமான வேறு இரண்டு வாகனங்களும் அங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. [ரா]

## ஒய்வூதியம் 9-ம் திகதி

[யாழ்ப்பாணம்]

கொக்குவில், பருத்தித்துறை காங்கேசன்துறைப் பகுதிகளைச் சேர்ந்த ஒய்வூதியக்காரர்களுக்கு கடந்தமாத ஒய்வூதியம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் நேற்றுத் தபாற்கந்தோரினால் வழங்கப் படவில்லை.

இவர்களுக்குரிய கடந்த மாத ஒய்வூதியம் மீண்டும் இப்மாதம் 9-ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். கோட்டையில் வைத்து வழங்கப்படும் எனத் தபால்நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [வா]

## "அரசுதான் பயங்கரவாதி"
### கொழும்பு மேல்நீதி மன்றில் தமிழ் இளைஞர்

[கொழும்பு]

"இந்த நீதிமன்றத்திற்கோ அல்லது நீதிபதிக்கோ எம்மை விசாரிக்க அதிகாரம் இல்லை. நாம் பயங்கரவாதிகள் அல்ல. இந்த அரசுதான் பயங்கரவாதி"

இவ்வாறு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. விக்னராஜா முன் ஆஜர் செய்யப்பட்ட பெனடிக்ட் பத்மன் என்றஇளைஞர் கூறினர்.

இவருடன் ஆர். ரத்தினராஜா, ஆர். ராஜேந்திரன், எஸ் ஏ பதுார்டீன் ஆகியோர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர் பதுார்டீனுக்கு ஆதரவாக சட்டத்தரணி எம். எச். எம். அஸ்வரும், மற்றைய இருவருக்காக சட்டத்தரணி கே. வி. மகேந்திரனும் ஆஜராகினர்.

மட்டக்களப்பில் சட்டரீதியான அனுமதியின்றி துப்பாக்கிகள், வெடிமருந்துகளைச் சேமித்து வைத்திருந்தனர் என்று இவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வழக்கின் இறுதியில் விசாரணையை ஜூலை மாதம் 11-ம் திகதிவரை நீதிபதி ஒத்திவைத்தார். [ய-செ]

## கொழும்பு போக்குவரத்து சுமுகம்

[வவனியா]

கட்டுநாயக்கா விமானக் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இடைநிறுத்தி வைக்கப் பட்டிருந்த கொழும்புக்கான போக்குவரத்துக்கள் யாவும் நேற்று மீண்டும் வழமை போல் பயணத்தை ஆரம்பித்தன.

தனியாா பஸ்கள், லொறிகள் யாவும் பெருமளவில் கொழும்பு சென்றன. [ரா]

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மத்திய பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா சமித்தியினர் இன்று செவ்வாய் மாலை யாழ் ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் ஈஸ்வராம்பாள் தினத்தை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாலவிகாஸ் சிறுவர்களின் நாடகம், பேச்சு, நடனம் முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## சேவையில் இந்து இளைஞர்

[திருகோணமலை]

கந்தளாய்க் குளம் உடைப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதில் திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை தீவிரமாக ஈடுபட்டுவருகிறது.

கந்தளாய்ப் பகுதியில் முகாமொன்று அமைத்துள்ள இந்து இளைஞர் பேரவை, பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள கிணறுகளைச் சுத்திகரிப்பது, வீடுகள் திருத்துவது போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். [மா]

## காட்டுப்புலம் கிராமம் தெரிவு

சித்தன்கேணி]

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம எழுச்சித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்வதற்கு சுழிபுரத்திலுள்ள காட்டுப்புலம் கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒவ்வொரு கிராமம் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படவுள்ளது அக்கிராமத்துக்கு மேற்படி சபையினரால் மின்சாரம் குடிநீர் வீதி அமைப்பு ஆகிய அபிவிருத்து வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

தெரிவு செய்யப்படும் இக்கிராமங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு கூடுதலான கடன்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## இலங்கைத் தமிழர் பிரச்னை:
## லண்டன் தமிழ் அமைப்பு ஐ. நா.வுக்கு மகஜர்

[லண்டன்]

லண்டனிலிருந்து இயங்கும் தமிழ் ஈழ சர்வதேச ஆய்வு அமைப்பு ஐ. நா. சபைக்கு இலங்கைத் தமிழர் பிரச்னை சம்பந்தமான மகஜரொன்றை அனுப்பியுள்ளது.

இம்மகஜரில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள், தமிழர்மீது மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் ஆகியன தாங்கமுடியாத நிலையை அடைந்துள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இம்மகஜருடன் இலங்கையில் நடைபெறும் சிததிரவதைகள்பற்றிச் சர்வதேச மன்னிப்புச் சபையின் பட்டியல், 1796ம் ஆண்டுமுதல் 1976ம் ஆண்டு வரை இலங்கையில் தமிழர் விஷயமாக நடைபெற்ற சம்பவங்கள்பற்றிய டயறி ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வமைப்பின் செயலாளர் திரு கே. பி ஸ்ரீநிவாசன் கையொப்பமிட்டுள்ள இம்மகஜரின் பிரதிகள் ஐ நா சபையின் நிரந்தரப் பிரதிநிதிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. [ய-செ]

## பனைஉச்சியிலிருந்தவரை துப்பாக்கிச்சூடு பதம்பார்த்தது

(புலோலி)

பருத்தித்துறை கல்லூரி வீதியில் பழைய நகரசபை அலுவலகத்திற்கு அருகாமையில் பனையிலிருந்து கள் இறக்கிக்கொண்டிருந்த சீவல் தொழிலாளி ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த இராசு வீரவாகு (வயது 22) என்ற சீவல்தொழிலாளியே படுகாயமடைந்தவர். பிள்ளைகளுக்குத் தந்தை ளானவராவர். கள் இறக்கிக்கொண்டிருக்கும் போது இராணுவமுகாம்பகுதியிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டினால் இவரது தொண்டையிலும் காலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன மெதுவாகப் பனையிலிருந்து இறங்கிய இவரை மக்கள் மந்திகை அரசினர் வைத்தி சாலைக்கு உடனடியாக எடுத்துச்சென்றனர். பின்னர் இவர் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு அவசரமாக எடுத்துச்செல்லப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### வைரவிப்பிள்ளை இராசநாயகம்

[உரும்பராய்]

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய இ. போ. ச ஊழியருமான வைரவிப்பிள்ளை இராசநாயகம் உரும்பராயில் காலமாகி விட்டார். இவர், இராசலெட்சுமியின் அன்புக் கணவரும், புஷ்பராணி. இந்திராணி இராமச்சந்திரன் [கல்வித் திணைக்களம், திருகோணமலை] காலஞ்சென்ற மகேந்திரராசா, சாந்தி உஷா, ராஜ்குமார் அவர்களின் அன்புத்தந்தையும் ரகு, சுந்தரம், யோகரட்ணம் [ஜேர்மனி] விமலநாயகி, தயானந்தன் [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமனுருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை 7 5-86 காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்

மனைவி, பிள்ளைகள்.
[C-2176]

### முருகேசு கதிரவேலு

(புங்குடுதீவு கிராம சபை முன்னாள் உறுப்பினர்)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், கொக்குவில் மேற்கு-சொர்ணவடலியை வதிவிடமாகக் கொண்டவருமான முருகேசு கதிரவேலு காலமானார்

இவர் காலஞ்சென்ற சிவபாக்கியம், விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புக்கணவரும், க. சண்முகலிங்கம், Dr. க. சாதானந்தன் (அமெரிக்கா), க. அருணா, க. தயானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாம்பிகை, ரஜனி ஆகியோரின் அன்புமாமனுரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) செவ்வாய்க் கிழமை 06-05-1986 கொக்குவில் மேற்கு-சொர்ண வடலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, கோம்பையன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்

தகவல்: க. சண்முகலிங்கம், கொக்குவில்.
(C 2155)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரல் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org